அந்திக்கிறிஸ்துவும் கள்ளத் தீர்க்கதரிசியும்

666



திரு. சாலமோன்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

அந்திக்கிறிஸ்துவும் கள்ளத் தீர்க்கதரிசியும்

666

அந்திக்கிறிஸ்துவும் கள்ளத் தீர்க்கதரிசியும்

666

திரு. சாலமோன்

WORD OF CHRIST
WOC

கிறிஸ்துவின் வார்த்தை நூல் நிலையம்
சென்னை, இந்தியா

அந்திக்கிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசியும்

Copyright © 2012 by Solomon

Antichrist and False Prophet (Tamil)

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means-electronic, mechanical, photocopying, recording, or otherwise-without the prior written permission of the publisher. The only exception is brief quotations in printed reviews.

First Edition - January 2012

Published by:
WORD OF CHRIST MINISTRIES
No. 100/3, Nirmala Apartments
Medavakkam Tank Road, Kellys
Chennai 600 010 Tamil Nadu, India
Phone: 044-2661 3242/ 4264 0111
E-mail: christianliterature@gmail.com
www.wordofchrist.org.in

Price: Rs 20/-

சமர்ப்பணம்

பத்து ஆண்டுகளாக என்னுடன் வாழ்ந்த என் மனைவி **Smitha Solomon** கடந்த 8 ஆண்டுகளாக மனநிலை பாதிக்கப்பட்டு கடந்த 13.4.2011 புதன்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். என் மனைவியின் நினைவார்த்தமாக இந்நூலை சமர்ப்பிக்கிறேன்.

முகவுரை

இயேசு கிறிஸ்து பிறப்பார் என்பதை யூதர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். காரணம், இயேசு பிறப்பார் என்பதை தீர்க்கதரிசிகளின் மூலமாக தேவன் கூறியிருந்தார். எதிர்பார்த்தபடியே இயேசு பிறந்தார். பிதாவின் சித்தத்தை செய்து முடித்தார். அதுபோலவே, அந்திக்கிறிஸ்துவின் பிறப்பையும் வேதம் கூறியுள்ளது. ஏற்றகாலத்தில் அந்திக்கிறிஸ்து பிறப்பான். இயேசுவைப் பிறக்கச் செய்தவர் தேவன். அந்திக்கிறிஸ்துவைப் பிறக்கச் செய்கிறவன் சாத்தான். இயேசு தேவ குமாரன். அந்திக்கிறிஸ்து பிசாசின் குமாரன் (2 தெச.2:3).

உலகத்தை இரட்சிக்கும்படி இயேசு பிறந்தார். உலகத்தைக் கெடுக்கும்படி அந்திக்கிறிஸ்து பிறப்பான். உலகத்திற்கான இறுதி முடிவைக்கொண்டு வருவதில் அந்திக்கிறிஸ்துவுக்கு முக்கியமான பங்குண்டு. சாத்தானுடைய விருப்பம் முழுவதையும் அந்திக்கிறிஸ்து நிறைவேற்றுவான். இன்றைய கிறிஸ்தவத்தில், அந்திக்கிறிஸ்துவின் வருகையைக் குறித்ததான விழிப்புணர்வும் எச்சரிப்பும் மற்றும் வெளிப்பாடுகளும் இல்லை என்பது பரிதாபகாரமான ஒன்றாகும். கிறிஸ்தவர்கள் வேதத்தை சரியாக விரும்பி வாசிப்பதோ, வரப்போகும் கொடிய நாட்களைக் குறித்து சிந்திப்பதோ இல்லை.

அந்திக்கிறிஸ்துவைப்பற்றிய சிறிதளவு தகவல்களைக்கூட விசுவாசிகள் கற்றுக்கொள்ளவில்லை என்பது பரிதாபமான ஒன்றாகும். நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற காலம் எப்படிப்பட்டது என்பதையும், அந்திக்கிறிஸ்துவின் வருகை எவ்வளவு சீக்கிரமாக இருக்கும் என்பதையும், அந்திக்கிறிஸ்துவையும் அவனுடைய குணாதிசயங்களையும் விசுவாசிகளுக்குத் தெளிவாக அறியச்செய்வது போன்றவை இந்நூலின் முக்கிய நோக்கமாகும். இந்நூலை வாசித்து பயன்பெறும்படி உங்கள் அனைவரையும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

கர்த்தரின் பணியில்

சாலமோன்

அந்திக்கிறிஸ்து என்றால் என்ன?

அந்திக்கிறிஸ்து என்றால் "எதிர்கிறிஸ்து" என மறையான மொழியிலும் "எதிரானவன்" என ஆங்கிலத்திலும் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது இயேசுவுக்கு எதிரானவனும் இயேசுவின் திட்டங்களுக்கு எதிர்த்து நிற்பவனும், இயேசுவின் குணாதிசயங்களுக்கு எதிரான குணாதிசயங்களை உடையவனாகவும் காணப்படுவான். இன்னும் கூறுவோமானால், இயேசு செய்கிற எல்லாவற்றையும் எதிர்த்து அதற்கு எதிர்மறையாக செயல்படுவான். இஸ்லாமியரின் புனித நூலாகிய குர்ஆனில் அந்திக்கிறிஸ்துவின் பெயர் "al-Wasih ad - Dajjal" எனக் கூறப்பட்டுள்ளது. Al-Wasih என்ற மறுபெயரும் உண்டு. al-Wasih ad - Dajjal எனும் பெயருக்கு அரேபிய மொழியில் "பொய்யான மேசியா" எனவும், "வஞ்சிக்கிறவன்" எனவும் அர்த்தம் தரப்பட்டுள்ளது.

அந்திக்கிறிஸ்துவுக்கு எத்தனை பெயர்கள் உள்ளன?

அந்திக்கிறிஸ்துவுக்கு வேதத்தில் பலவிதமான பெயர்கள் உள்ளன?

1. அந்திக்கிறிஸ்து – 1 யோவா.2:18, 4:3, 2 யோவா.7
2. கேட்டின் மகன் – 2 தெச.2:3b
3. பாவமனுஷன் – 2 தெச.2:3b
4. அக்கிரமக்காரன் – 2 தெச.2:8-9
5. மிருகம் – வெளி.13:1-7, 17:7-8, 16:13, தானி.8:4
6. வேறொருவன் – யோவா.5:43

அவனுடைய குணாதிசயங்கள் எத்தனை?

1. எதிர்த்து நிற்கிறவன் – 2 தெச.2:4a
2. தன்னை உயர்த்துகிறவன் –தானி.11:36-37; 2 தெச.2:4b
3. தேவாலயத்தில் தேவன்போல உட்காருபவன் – 2 தெச.2:4c
4. தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவன் 2 தெச.2:4d
5. சகல வல்லமையோடு, பொய்யான அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்பவன் 2 தெச.2:9

6. வஞ்சிக்கிறவன் 2 தெச.2:10

7. பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசுபவன் வெளி.13:5

8. பரிசுத்தவான்களோடே யுத்தம் செய்பவன் தானி.7:25, 12:7, வெளி.13:7

9. ஒவ்வொரு கோத்திரத்தின்மேலும், பாஷைக்காரர்மேலும், ஜாதிகள்மேலும் அதிகாரமுடையவன் வெளி.13:7b

10. காலங்களையும் பிரமாணங்களையும் மாற்றுபவன் தானி.7:25b

1. எதிர்த்து நிற்கிறவன் - 2 தெச.2:4

அந்திக்கிறிஸ்து எதிர்த்து நிற்கிறவனாகக் காணப்படுவான். அவன் இந்த பூமியில் மனிதனாகப் பிறந்து வளர்வான். அவனுக்கென தேவனால் நியமிக்கப்பட்டுள்ள காலத்தில் தன்னை வெளிப்படுத்துவான். இவன் அரசியல் செல்வாக்கு உடையவனாகவும், சகல தேசங்களாலும் அங்கீகரிக்கப்படுபவனாகவும் இருப்பான். இவன் பூமியிலுள்ள சகல ராஜ்யங்களையும், சர்வவல்லவரான தேவனையும் எதிர்த்து நிற்பான். அதாவது, தேவனுடைய கற்பனைகளையும் உலக தேசங்களின் சட்ட திட்டங்கள் மற்றும் அதிகாரங்கள் போன்றவற்றையும் எதிர்ப்பான். தன்னுடைய சட்டதிட்டங்களை மட்டுமே வலியுறுத்துவான்.

2. தன்னை உயர்த்துகிறவன் 2 தெச.2:4, தானி.11:36-37

தேவனுக்கும், அவருக்கு மட்டுமே சொந்தமான ஆராதனைக்கும் மேலாகத் தன்னை உயர்த்துவான். ஆராதனை என்பது தேவன் ஒருவருக்கே உரியதாகும் (உபா.6:13). இயேசு சாத்தானால் சோதிக்கப்பட்டபோது, தேவனுக்குரிய ஆராதனையைத் தனக்குத் தரும்படி சாத்தான் கேட்டான். ஆனால், ஆராதனை என்பது தேவன் ஒருவருக்கே உரியது என இயேசு பதிலளித்தார் (மத்.4:8–10). தேவனுக்கான ஆராதனை தேவனுக்கு மட்டுமே உரியது என இயேசு கூறினார். ஆனால், அந்திக்கிறிஸ்து அப்படியல்ல. தேவனுக்குக் கொடுக்கவேண்டிய ஆராதனைக்கு மேலாகத் தன்னை உயர்த்துவான். இது யாருடைய வேலை? தூதனாகயிருந்து, தன்னைத்தான் உயர்த்தி சாத்தானாக மாறிய சாத்தானின் வேலையாகும்.

அந்திக்கிறிஸ்து சாத்தானின் மகனாவான் (2 தெச.2:3) சாத்தானின் மகனிடம் சாத்தானின் சுபாவம் மட்டுமே காணப்படும் (யோவா.8:44, 1 யோவா.3:8–12). தன்னைத்தான் உயர்த்துதல் பெருமையாகும். பெருமை என்பது தேவனிடமிருந்து வருகிற ஒன்றல்ல. அது சாத்தானிடமிருந்து

வருகிறது (1 யோவா.2:16). அந்திக்கிறிஸ்துவுக்குள் பெருமையைக் கொண்டுவந்து, தன்னைத்தான் உயர்த்தும்படி அவனைத் தூண்டுபவன் சாத்தானாவான். மட்டுமல்லாது இப்படிப்பட்ட அதிகாரத்தையும் சாத்தான் அந்திக்கிறிஸ்துவுக்குக் கொடுப்பான் (வெளி.13:4). தன்னைத்தான் உயர்த்தி பெயர், புகழ் போன்றவற்றை சம்பாதிப்பவன் தேவனால் உண்டானவன் அல்ல.

"தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்" என ஏற்கனவே கூறினவன் சாத்தான் (ஏசா.14:13a). ஆகவே, அவனுடைய மனுஷனாகிய அந்திக்கிறிஸ்து தேவனுக்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாவான். பூமியிலுள்ள அனைவருக்கும் தான் மட்டுமே இரட்சகன் என எண்ணிக்கொள்வான்.

3. தேவாலயத்தில் தேவன்போல உட்காருவான் - 2 தெச.2:4

தேவனுடைய ஆலயம் என்பது தேவனுடைய பரிசுத்த நகரமாகிய எருசலேமையும் அங்குள்ள ஆலயத்தையும் குறிப்பதாகும். அந்திக்கிறிஸ்து இந்த எருசலேமைப்பிடித்து அங்கு அமருவான். அவனுடைய ஆட்சியானது மூன்றரை ஆண்டுகள் (நாற்பத்திரண்டு மாதங்கள்) வெளி.11:2, 13:5, தானி. 12:11). எருசலேமில் காணப்படும். அவன் இப்படிச்செய்து பரிசுத்த நகரத்தைத் தீட்டுப்படுத்துவான். இப்படி அந்திக்கிறிஸ்து எருசலேமில் பிரவேசிக்கும் முன்பு அநேக யூதர்கள் வஞ்சிக்கப்படுவார்கள். விசுவாச துரோகம் முன்பு நேரிடும் (2 தெச.2:3b). தேவனையும் அவருடைய வசனங்களையும் சரியாக அறியாதவர்கள் அந்திக்கிறிஸ்துவினால் வஞ்சிக்கப்படுவார்கள்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த அந்திக்கிறிஸ்து (**அந்திக் கிறிஸ்துவுக்கு முன்னோடி**) இப்படியே செய்து, பரிசுத்த நகரமாகிய எருசலேமைத் தீட்டுப்படுத்தினான். அவனால் அநேக யூதர்கள் வஞ்சிக்கப் பட்டார்கள். யூதர்கள் ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்தார்கள். அதுபோலவே, இந்த அந்திக்கிறிஸ்து எருசலேமில் பிரவேசிக்கும் முன்பு நடைபெறும் (மத்.24:10).

பழைய ஏற்பாட்டின் அந்திக்கிறிஸ்து யார்?

பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்த அந்திக்கிறிஸ்துவின் பெயர் Antiochus Ephipanes என்பதாகும். இந்த Antiochus Ephipances B. C. 168ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 16ஆவது நாளில் எருசலேமிற்குள் தனது படையை அனுப்பி, ஆயிரக்கணக்கான யூதர்களைக் கொலைசெய்தான். இவன் எருசலேமிற்குள் நுழையும் முன்பு சில யூதர்களை வஞ்சித்தான்.

யூதர்களிடையே "விசுவாச துரோகம்" நேரிட்டது (தானி.11:21). இந்த **Antiochus Ephipanes** எருசேலமிற்குள் நுழைவதற்கு உதவிசெய்து யூதர்களைக் காட்டிக் கொடுத்தவர்கள் **Jason** மற்றும் **Menelause** எனும் இரு யூதர்களாவர். இவர்கள் இருவரும் பிரதான ஆசாரியர்களாக மாறும்படி முயற்சி செய்து வந்தவர்களாவர்.

இந்த இருவரும் இணைந்து, பிரதான ஆசாரியனாக இருந்துவந்த **Onias** எனும் யூதனை இந்த **Antiochus Ephipanes**-சிடம் காட்டிக் கொடுத்தார்கள். இந்த **Onias** எனும் பிரதான ஆசாரியன் கொலைசெய்யப்பட்டான். ஆனால், **Onias** கொல்லப்பட்ட பின்பு, அவனைக் காட்டிக்கொடுத்து அதன்பின்பு பிரதான ஆசாரியர்களாக மாற நினைத்த **Jason** மற்றும் **Menelause** ஆகிய இருவரும் **Antiochus Ephipanes** - சினால் ஏமாற்றப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள்.

இந்த **Antiochus Ephipanes** தன்னுடைய படைத்தளபதியையும் அவனுடன் இருபதினாயிரம் படைவீரர்களையும் எருசலேமிற்குள் அனுப்பினான். இவர்கள் எருசலேமிற்குள் புகுந்து அநேக யூதர்களைக் கொலைசெய்து, **Zeus** எனும் கிரேக்கக் கடவுளின் சிலையை அமைத்து, அந்த சிலை முன்பாகப் பன்றிகளைப் பலியிட்டார்கள். அப்போது பரிசுத்த நகரம் தீட்டுப்பட்டது. தாங்கள் வஞ்சிக்கப்பட்டதை அறிந்த யூதர்களில் சிலர் இந்த **Antiochus Ephipanes** எனும் ராஜாவை எதிர்த்தார்கள். அந்தக் குழுவிற்கு **Chassidim** எனப் பெயரிட்டார்கள் (தானி.11:32). இந்தக் குழுவை உருவாக்கிய யூதனின் பெயர் **Mattathias** என்பதாகும். இவன் ஆசாரியனாக இருந்தவனாவான். இவனுடைய மூன்று மகன்களாகிய **Judas, Jonathan, Simon** ஆகியோரும் தங்களது தகப்பனுடன் இணைந்து செயல்பட்டார்கள். இவர்கள் யூதர்கள் அனைவரையும் உணர்வடையச் செய்தார்கள். இந்த **Chassidim** எனும் இயக்கத்திலிருந்து உருவானதுதான் பரிசேயர் எனும் யூதப் பிரிவாகும். (இதை யூத வரலாற்று ஆசிரியரான **Titus Flavius Josephus** தனது ஆராய்ச்சி நூலில் குறிப்பிட்டுள்ளார்).

அந்திக்கிறிஸ்துவும்கூட இப்படியே யூதர்களை வஞ்சித்து எருசலேமைத் தீட்டுப்படுத்தி, பாழான அருவருப்பை அங்கு ஸ்தாபிப்பான் (மத்.24:15). விசுவாச துரோகத்திற்கு இடங்கொடுத்து, அந்திக்கிறிஸ்துவினால் வஞ்சிக்கப்பட்ட யூதர்களில் பலர் அவனை எதிர்த்து, இரத்தசாட்சிகளாக மரிப்பார்கள் (வெளி.6:9–10, அதிகாம் 7).

4. தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவன் - 2 தெச.2:4

தன்னைத்தான் தேவனென்று கூறி, வேறு தேவன் இல்லையென்றும், பூமியின் குடிகள் யாவும் தன்னை வணங்கவேண்டும் என்றும் கட்டளையிடுவான் (2 தெச.2:4a). இவனுடைய ஆதரவாளனாகிய கள்ளத்தீர்க்கதரிசி (இரண்டாம் மிருகமுமாகிய மனிதன்), அந்திக்கிறிஸ்துவின் ஆராதனையைத் துவங்கிவைக்கும் ஆராதனைத் தலைவனாக இருப்பான் (வெளி.13:11–18). மட்டுமல்லாது, அந்திக்கிறிஸ்து தன்னுடைய சொந்த மதத்தை ஸ்தாபிப்பான். அவனுடைய மதத்தை பூமியின் ராஜாக்கள் அனைவரும் பின்பற்றுவார்கள் (வெளி.17 ஆம் அதிகாரம்).

5. சகல வல்லமையோடு பொய்யான அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்வான் 2 தெச.2:9.

இந்த அக்கிரமக்காரனாகிய அந்திக்கிறிஸ்து வெளிப்படும் முன்பு சில அடையாளங்கள் நடைபெறும். அவை யாவன? பொய்யான அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறும். அற்புத அடையாளங்களில் உண்மையானவைகள் பொய்யானவைகள் என இரு வகைகள் உண்டு. உண்மையான அற்புதங்களும் அடையாளங்களும் தேவனிடமிருந்து வருகிறது. பொய்யான அற்புத அடையாளங்கள் சாத்தானிடமிருந்து வருகிறது. இவை இரண்டையும் எவ்வாறு வேறுபிரித்து அறியமுடியும்?

உண்மையான அற்புத அடையாளம்	**பொய்யான அற்புத அடையாளம்**
1. சொன்னபடியே நடைபெறும்	1. நடைபெறுவதுபோல இருக்கும். ஆனால் நடைபெறாது
2. இரட்சிப்பை வலியுறுத்தும்	2. இரட்சிப்பைப் பற்றியே பேசாது
3. தேவனுக்கு மகிமையைக் கொண்டுவரும்	3. மனிதனுக்கு மகிமையைக் கொண்டுவரும்
4. எதையும் எதிர்பார்க்காமல் செய்யப்படும் (அப்.3:6–8)	4. பணத்திற்காக செய்யப்படும் (அப்.16:16–19, 2 பேது.2:1–2)
5. சபையும் ஊழியமும் வளரும் (அப்.2:47, 5:14)	5. தனிப்பட்ட மனிதனின் பெயரும் செல்வாக்கும் வளரும் (2 தீமோ.3:5–9, தீத்து 1:11)

6. சத்தியத்தை வெளிப்படுத்தும்	6. சத்தியத்தைப் புறக்கணித்து வஞ்சனையான வார்த்தைகளை வெளிப்படுத்தும் (எபே.4:14, 2 பேது.2:3)
7. சுய விளம்பரத்தை நாடாது	சுய விளம்பரத்தை முக்கியப்படுத்தும்

அற்புதங்கள் நடைபெற்றுவிட்டது, எயிட்ஸ் வியாதி குணமாகிவிட்டது என்றெல்லாம் மேடையிலும் சபைகளிலும் அறிக்கையிட்டபின்பும், அவைகள் பொய்யென்று நிரூபிக்கப்பட்ட சம்பவங்கள் உலகெங்கிலும் குறிப்பாக தமிழ்நாட்டிலும் நடைபெற்றுள்ளது. இப்போதும் நடைபெற்று வருகிறது. இதற்கு சரித்திரமும், மருத்துவர்களும், பத்திரிகைகளும் சாட்சிகளாக இன்றும் உள்ளனர். இதற்கு அநேக ஆதாரங்களும் உள்ளன.

6. வஞ்சிக்கிறவன் 2 தெச.2:10

அந்திக்கிறிஸ்துவின் செயல்களில் முக்கியமானவை வஞ்சனையாகும். வஞ்சனை என்பதை உடனடியாக அறிய இயலாது. மிக ஞானத்தோடு நடந்துகொள்ளும் ஒரு சிலர் மட்டுமே வஞ்சனைக்குத் தப்புவார்கள்.

உதாரணத்திற்கு, ஒரு பொருளைக்குறித்தும் அதன் தரம் விலை போன்றவற்றைக்குறித்தும் ஏற்கனவே நன்றாக அறிந்தவர்களை யாராலும் வஞ்சிக்க இயலாது. ஆனால், அந்தப் பொருளைக் குறித்து ஒன்றும் அறியாதவர்களை எளிதில் ஏமாற்றிவிடலாம். அதுபோலவே, இயேசுவையும் அவருடைய வசனங்களையும் நன்றாக அறிந்தவர்களை சாத்தானும், அந்திக்கிறிஸ்துவும், கள்ளத்தீர்க்கதரிசிகளும், தவறான கொள்கைக் காரர்களும் வஞ்சிக்க இயலாது. வேத வசனங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவைகளை இரவும் பகலும் தியானித்து, முறைப்படி கற்றுக் கொள்ளாத ஜனங்கள் வஞ்சிக்கப்படுவது உறுதி.

மனிதர்களை வஞ்சித்து, விசுவாசத்தைவிட்டு விலக்கி, தன் வசப் படுத்தும்படி அந்திக்கிறிஸ்து வஞ்சனையான வார்த்தைகளைப் பேசி அனைவரையும் மயக்குவான் (தானி.11:32, 2 தெச.2:3). விசுவாசதுரோகம் நேரிடும். இதைக்குறித்து பவுல் விளக்கமாகக் கூறியுள்ளார் (1 தீமோ.4:1). நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்தக் காலத்தில் இவைகளைக் காணமுடிகிறது. கிறிஸ்தவத்தில் அநேகர் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் செவிசாய்த்து, தேவன்மீதுள்ள விசுவாசத்தை விட்டு விலகி, தனிப்பட்ட மனிதர்களின்மேல் விசுவாசம் வைப்பதைக் காணமுடிகிறது. இயேசு இதைத் தெளிவாகக் கூறியுள்ளார் (மத்.24:11). வேத

வசனங்களும், அவைகளைப் பிரசங்கிப்பவர்களும் மறைந்து, தங்களது சொந்த தரிசனங்கள், கருத்துக்கள், உபதேசங்கள் போன்றவற்றைப் பிரசங்கிப்பவர்கள் பெருகிவிட்டார்கள். தேவனைப் பின்பற்றாமல் இப்படிப் பட்ட மனிதர்களைப் பின்பற்றுகிற விசுவாசிகள் பெருகிவிட்டார்கள் (2 தீமோ.4:3–4).

அந்திக்கிறிஸ்துவினால் வரும் விசுவாச துரோகமும் வஞ்சனையும் இப்போதே கிரியைசெய்யத் துவங்கியுள்ளது. இதை யோவான் மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார் (1 யோவா.4:1). அந்திக்கிறிஸ்து இன்னும் வெளிப்படவில்லை. ஆனால் அவனுடைய ஆவியும் அவனுடைய ஆதர வாளர்களும் இப்போதே செயல்பட்டுவருகிறார்கள். இதை யார் அறிவார்கள்? பரிசுத்த ஆவியானவரையே சரியாக அறியாதவர்கள் வஞ்சிக்கிற ஆவிகளை எவ்வாறு அறியமுடியும்? இன்றும் அநேகர் வஞ்சிக்கப்பட்டு வருகிறார்கள். அற்புதங்களையும் அடையாளங்களையும் நோக்கி ஓடுகிற ஜனங்கள் வஞ்சிக்கப்படுவது உறுதியான ஒன்று.

சத்தியத்தை விசுவாசித்து, அதைப்பின்பற்றி, அதன்படி செய்யாமல் மனிதர்களின் கருத்துக்களையும் தரிசனங்களையும் நம்பி வாழ்கிற ஜனங்கள் அந்திக்கிறிஸ்துவின் வஞ்சனைக்கு உடன்படும்படியும், இயேசுவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல் பொய்யை நம்பி வாழ்பவர்கள் வஞ்சிக்கப் படும்படியாகவும் கொடிய வஞ்சகமானது தேவனுடைய அனுமதியுடன் இறங்கிவரும் (2 தெச.2:11–12, 1 இரா.22:21–23, 1 சாமு.16:14, யோபு 12:16). தொடர்ந்து கீழ்ப்படியாமலிருக்கும் யாவருக்குள்ளும் இந்த வஞ்சகத்தின் ஆவி அனுப்பப்படும்.

7. பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசுவான் வெளி.13:5.

பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசுவது அந்திக் கிறிஸ்துவின் முக்கியமான செயலாகும். பெருமையானவைகள் பிசாசினால் வருபவை. சகல தேசங்களுக்கும், தேசத்தின் தலைவர்களுக்கும் எதிராகவும் பெருமையானவைகளைப் பேசுவான். தன்னை யாராலும் எதிர்க்கவோ ஜெயிக்கவோ இயலாது என்று பேசுவான். தூஷணம் என்பது தேவனுக்கு விரோதமான ஒன்றாக இருக்கும். தேவனை தூஷித்தலும் சாத்தானின் செயலாகும். தேவனாலும் தன்னை எதுவும் செய்ய இயலாது எனக் கூறுவான். தேவனுடைய நாமம், அவருடைய வாசஸ்தலம் மற்றும் பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷிப்பான் (வெளி.13:6). தூஷித்தல் என்பது

தேவனுடைய வல்லமையைக் குறைகூறுவதும், அவருக்கு விரோதமாகப் பேசுவதுமாகும் (தானி.7:25).

8. பரிசுத்தவான்களோடே யுத்தம் செய்வான் தானி.7:23, 12:7, வெளி.13:7

உலகில் உள்ள அனைவர்மேலும் அவனுக்கு அதிகாரம் கொடுக்கப்படும் (வெளி.13:7). ஆனால் தேவனுடைய பரிசுத்தவான்கள் அனைவரும் அந்திக் கிறிஸ்துவின் முக்கியமான குறிக்கோலாக இருப்பார்கள். காரணம், அந்திக் கிறிஸ்துவை அடையாளம் கண்டு, அவனை எதிர்த்து தேவனை விசுவாசிப்பார்கள். அந்திக்கிறிஸ்துவின் கிரியைகளுக்கு உடன்பட்டு அவனை சேவிக்க மறுப்பார்கள். இதனால் கோபமடையும் அந்திக்கிறிஸ்து, பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களைக் கொலைசெய்வான். பல பரிசுத்தவான்கள் கொலைசெய்யப்படுவார்கள். சில பரிசுத்தவான்கள் தப்புவிக்கப்படுவார்கள் (வெளி.12:14–17).

பரிசுத்தவான்களுடனான அந்திக்கிறிஸ்துவின் யுத்தமானது அவனுக்குத் தற்காலிகமான வெற்றியைக் கொடுக்கும். ஆனால் நிரந்தரமான வெற்றி பரிசுத்தவான்களுடையதாக இருக்கும். அதாவது, அந்திக்கிறிஸ்து பரிசுத்தவான்களின் சரீரங்களை மட்டுமே அழிப்பான். ஆனால், அவர்களின் ஆத்துமாக்களை அழிக்க அவனால் இயலாது (மத்.10:28). இதுவே பரிசுத்தவான்களின் வெற்றியாக இருக்கும்.

9. ஒவ்வொரு கோத்திரத்தின்மேலும், பாஷைக்காரர்மேலும், ஜாதிகள்மேலும் அதிகாரமுடையவன் வெளி.13:7b

கோத்திரம் என்பது இஸ்ரவேலரைக் குறிப்பதாகும். பாஷைக்காரர் என்பது உலகெங்கிலுமுள்ள பல்வேறு நாடுகளைக் குறிப்பதாகும். ஜாதிகள் என்பது இயேசுவை விசுவாசியாத அஞ்ஞானிகளைக் குறிப்பதாகும். அதாவது, இயேசுவை ஏற்றுக்கொள்ளாத புறஜாதியார். இஸ்ரவேலரின் கோத்திரங்கள், உலக நாடுகள் மற்றும் அவைகளில் உள்ள அவிசுவாசிகள் போன்றோர் அனைவர்மேலும் அந்திகிறிஸ்து அதிகாரம் செலுத்துவான். அனைவரும் அவனுடைய ஆளுகைக்கு உட்பட்டிருப்பார்கள். கிறிஸ்துவின் ஆளுகையைப் புறக்கணித்தவர்கள் அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்கு உட்படுவார்கள். பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள் அந்திக்கிறிஸ்துவின் ஆளுகையிலிருந்து தங்களை விலக்கிக் காப்பார்கள். இயேசுகிறிஸ்துவின் சித்தத்தை செய்யவிடாமல் தன்னுடைய சித்தத்தை செய்ய வைப்பதே அந்திக்கிறிஸ்துவின் அதிகாரமாக

இருக்கும். ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத மனிதர்கள் இவனுடைய ஆளுகையை ஏற்றுக்கொள்வார்கள் (வெளி.13:8).

10. காலங்களையும் பிரமாணங்களையும் மாற்றுபவன் தானி.7:25b

காலம்: காலங்களையும் பிரமாணங்களையும் உருவாக்கியவர் தேவன். தேவனால் ஏற்படுத்தப்பட்டவைகளையே மாதிரிகளாக உலகம் பின்பற்றுகிறது. பகலில் வேலை செய்யவும், இரவில் ஓய்வெடுக்கவும் தேவன் பகலையும் இரவையும் வெவ்வேறாகப் பிரித்தார் (ஆதி.1:14). காலங்களை அமைத்தவர் தேவன் என்பதை இந்த வசனம் கூறுகிறது. மட்டுமல்லாது, தேவன் சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாகச் செய்திருக்கிறார் எனவும் வேதம் கூறுகிறது (பிர.3:11). எல்லாவற்றிற்கும் வெவ்வேறான காலங்கள் உண்டு (பிர.3:1–8). தேவகுமாரனாகிய இயேசுவுக்கும் காலம் குறிக்கப்பட்டிருந்தது (யோவா.2:4, மாற்.14:41, மத்.26:45). இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான காலம் தேவனால் குறிக்கப்பட்டுள்ளது (மத்.24:36–37, அப்.1:7). அந்திக்கிறிஸ்து வெளிப்படும் காலமும் தேவனால் குறிக்கப்பட்டுள்ளது (2 தெச.2:6).

ஆகவே, தேவனால் ஏற்படுத்தப்பட்ட காலங்களை அந்திக்கிறிஸ்து மாற்றுவான். வேலை செய்யவும் ஓய்வெடுக்கவும் வெவ்வேறான காலங்களை அரசாங்கம் நியமித்துள்ளது. ஆனால் அந்திக்கிறிஸ்து இப்படிப்பட்ட காலங்களைத் தன்னுடைய விருப்பப்படி மாற்றுவான். மொத்தத்தில் தேவனுடைய அமைப்பின் திட்டத்திற்கு எதிராக செயல்படுவான்.

பிரமாணம்:

பிரமாணங்கள் என்பது தேவனால் ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களாகிய அதிகாரங்களாகும். அதிகாரங்கள் யாவும் தேவனால் உண்டாயிருக்கிறது (ரோம.13:1–2). தேவனால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரங்களை உலகம் மாதிரியாகப் பின்பற்றுகிறது. இப்படிப்பட்ட அதிகாரங்களை அந்திக்கிறிஸ்து மாற்றுவான். பாவம் செய்யவும், நீதியைப் புரட்டவும், கொடுமையைச் செய்யவும் மனிதர்களை உற்சாகப்படுத்துவான். செய்யக்கூடாது என தேவன் கட்டளையிட்டுள்ள அனைத்தையும் செய்யவேண்டும் என கட்டளையிடுவான். அவனுடைய அதிகாரங்களை மீறுபவர்களைக் கொலைசெய்வான். அநீதியைச் செய்யும்படியான அதிகாரம் பிசாசினால் வரும் (எபே.6:11–12, கொலோ.1:13). அந்திக்கிறிஸ்து தன்னுடைய காலத்தில் செயல்படும்படியாக தேவன் அவனை அனுமதிப்பார் (வெளி.13:7, 2 தெச.2:7–8). தேவனுடைய

பிரமாணங்களை மறுதலித்து தன்னுடைய சொந்தப் பிரமாணங்களை ஏற்படுத்துவான்.

அவன் எப்போது வெளிப்படுவான்?

அவன் தன்னுடைய காலத்திலே வெளிப்படுவான். அதாவது, தேவனால் ஏற்படுத்தப்பட்டுள்ள காலத்தில் வெளிப்படுவான். தற்போதைய காலம் பரிசுத்த ஆவியானவருடைய காலம். பெந்தெகொஸ்தே நாளில் இறங்கிவந்த பரிசுத்த ஆவியானவர் இன்றும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். அவர் செயல்படும் காலத்தில் அந்திக்கிறிஸ்துவினால் செயல்பட இயலாது. ஆனால், பரிசுத்த ஆவியானவர் எடுத்துக்கொள்ளப்படும் காலம் வருகிறது. அவர் எடுத்துக்கொள்ளப்படும் காலத்தில் அந்திக்கிறிஸ்து வெளிப்படுவான் (2 தெச 2:7–8). இந்த வசனங்களில் கூறப்பட்டுள்ள "தடைசெய்கிறவன்" எனும் வார்த்தையானது பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பதாகும்.

அப்படியானால் பரிசுத்த ஆவியானவரின் செயல் இந்த பூமியில் அறவே அற்றுப்போகுமா? இல்லை. ஆனால், அந்திக்கிறிஸ்து செயல்படும்படி பரிசுத்த ஆவியானவர் இடங்கொடுப்பார். தேவனுடைய நற்செய்தியை ஏற்றுக்கொள்ளாதவர்கள் அந்திக்கிறிஸ்துவினால் வஞ்சிக்கப்பட்டு, துன்புறுத்தப்படும்படி பரிசுத்த ஆவியானவர் இடங்கொடுப்பார் (2 தெச 2:11–12). இன்னும் கூறுவோமானால், கிருபையின் காலம் முடிவடைந்து கொடுமையின் காலம் துவங்கும். தடைசெய்கிறவராகிய பரிசுத்த ஆவியானவர் நீக்கப்படுவார் என்பது, சபை எடுக்கப்படுதலையும் குறிப்பதாகும். உண்மையாக இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் யாவரும் இந்த பூமியிலிருந்து எடுக்கப்படும் வரையிலும் பரிசுத்த ஆவியானவர் அந்திக்கிறிஸ்துவின் வெளிப்படுதலைத் தடைசெய்வார்.

சபை எடுக்கப்படும்போது அந்திக்கிறிஸ்து வெளிப்படுவான். அதுவரையிலும் அவனுடைய ஆதரவாளர்கள் இந்த பூமியில் செயல்பட்டுக்கொண்டிருப்பார்கள். அந்திக்கிறிஸ்து இன்னும் வெளிப்படவில்லை. ஆனால், அவனுடைய ஆவி இப்போதும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது (1 யோவா 2:18–19). இயேசுவுக்கு வழியை ஆயத்தப்பண்ணும்படி யோவான்ஸ்நானகன் வந்து செயல்பட்டான். அதுபோலவே, அந்திக்கிறிஸ்து வெளிப்படுவதற்கு முன்பு அவனுடைய மனிதர்கள் அந்திக்கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தப்பண்ணும்படி இந்த உலகில் செயல்படுவார்கள். இவர்களை அடையாளம் காண்பது மிகவும் முக்கியமானதாகும்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பரிசுத்த ஆவியானவர் தம்முடைய வேலையை நிறுத்தும்போது அந்திக்கிறிஸ்து பகிரங்கமாக வெளிப்படுவான் [illegible].

அந்திக்கிறிஸ்து எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்வான்?

அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியானது ஏழு ஆண்டுகள் காணப்படும் (தானி.9:27). ஏழு வாரங்கள் என்பது ஏழு ஆண்டுகளைக் குறிப்பதாகும்.

முன்பு கூறியபடி, இந்த ஏழு ஆண்டுகால ஆட்சியானது துவங்கும் முன்பு சபை எடுத்துக்கொள்ளப்படும். அதன்பிறகு இந்த பூமியில் காணப்படும் யூதர்களுடன் அந்திக்கிறிஸ்து உடன்படிக்கை செய்து, எருசலேம் நகரத்திற்கு அனைத்து யூதர்களையும் திரும்பி வரச்செய்து, எருசலேம் தேவாலயத்தை அவர்களுக்காக மறுபடியும் கட்டுவிப்பான். மூன்றரை ஆண்டுகள் சென்றபின்பு, தன்னுடைய சுபாவத்தை வெளிப்படுத்துவான்.

மூன்றரை ஆண்டுகளின் இறுதியில், தேவாலயத்தில் நடைபெற்றுவந்த அன்றாட பலியைத் தடைசெய்து, அருவருப்பை (விக்கிரத்தை) தேவாலயத்தில் வைப்பான். இப்படிச்செய்து எருசலேமைத் தீட்டுப் படுத்துவான். (தானி.9:27, 11:31, 12:11, மத்.24:15–16). இப்படிப்பட்ட கொடிய நாட்களைக்குறித்து இயேசு கூறியுள்ளார் (மத்.24:21).

அந்திக்கிறிஸ்து யாராக இருப்பான்?

அந்திக்கிறிஸ்து எங்கிருந்து வருவான் என வேதத்திலெங்கும் சொல்லப் படவில்லை. அதாவது எந்த தேசத்திலிருந்து வருவான் எனக் கூறப்பட வில்லை. ஆனால், இஸ்லாமியரின் பிரிவினரில் **Shiite** எனும் பிரிவினரின் விசுவாசம், எதிர்பார்ப்பு மற்றும் தீர்க்கதரிசனங்களை மையமாக வைத்துப் பார்க்கும்போது, அந்திக்கிறிஸ்து எங்கிருந்து வருவான் என்பதை யூகிக்க முடியும்.

இஸ்லாமில் அந்திக்கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மற்றுமொரு பெயர் **Mahdi** என்பதாகும். **Mahdi** என்பதற்கு "இறுதி மனிதன்" எனப் பொருள்படும். இந்த **Mahdi** இஸ்லாமின் பணிரெண்டாவது இமாம் ஆவார். இவர் முகமதுவின் பணிரெண்டாவது வாரிசு என்பது இஸ்லாமியரின் நம்பிக்கை. இவருக்கு "மறைந்திருக்கும் இமாம்" என்றும் பெயருள்ளது. இவருடைய முழுப்பெயர் **Muhammad al-Mahdi** என்பதாகும். இந்த **Mahdi**-யின் உயிருக்கு ஆபத்து இருந்தபடியால், சிறு வயதிலேயே ஒரு கிணற்றில் மறைத்து வைக்கப்பட்டார் என்பதும், உலகத்தில் பாவம் பெருகும்போது வெளிப்படுவார் என்பதும் நம்பிகையாகும்.

இவர் மறைத்துவைக்கப்பட்ட கிணறானது, ஈரான் நாட்டின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள **Jamkaran** எனும் மசூதியில் அமைந்துள்ளது. இங்கு வருகிற இஸ்லாமியர்கள் தங்களது ஜெப விண்ணப்பங்களை எழுதி இந்தக் கிணற்றில் போடுவது வழக்கம். இந்தக் கிணற்றில் மறைந்துள்ள **Mahdi** இந்த விண்ணப்பங்களைக் கண்டு பதிலளிப்பார் என்பதும் நம்பிக்கையாகும். இந்த

Mahdi உலகத்தில் தோன்றி ஏழு ஆண்டுகள் ஆட்சி செய்வார் என்பது இவர்களின் நம்பிக்கையாகும். அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியானது ஏழு ஆண்டுகள் என்பதை கவனிக்கவேண்டும்.

முகமதுவின் மகளாகிய பாத்திமாவின் வம்சாவழியில் **Mahdi** தோன்றுவார் என்பது இஸ்லாமியரின் நம்பிக்கையாகும். பாத்திமாவின் கணவன் பெயர் Abdullah என்பதாகும். இந்த **Mahdi** மனிதனாக அவதரிப்பார் என்பதும், இவருடைய அம்மாவின் பெயர் பாத்திமா எனவும், தகப்பனின் பெயர் **Abdullah** எனவும் இருக்கும் என்பதும் இஸ்லாமிய தீர்க்கதரிசனமாகும். இவர் உலகில் ஆட்சி செய்யும்போது இவருடைய வயது 40–ஆக இருக்கும். உயரமான தோற்றமும், வெண்மை நிறமும் உடையவராக இருப்பார். சிறிதளவு திக்குவாய் உள்ளவராக இருப்பார். இவைகள் இஸ்லாமிய தீர்க்கதரிசனமாகும்.

1. இவர் ஒரு இரவில் தன்னை யார் என வெளிப்படுத்துவார்.
2. இந்த பூமியில் இவருடைய பெயர் **Hazrat Muhammad** எனப்படும்.
3. ஈராக் தேச மக்களின் ஆதரவைப் பெறுவார்.
4. யுத்தங்கள் செய்வார்.
5. ஏழு ஆண்டுகள் ஆட்சிசெய்வார்.

நவம்பர் 17, 2005, சனிக்கிழமை ஈரானில் நடைபெற்ற ஒரு தொழுகையின் போது, ஈரான் அதிபர் **Ahamadinejad** கூறுகையில், இஸ்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் **Imam al-Mahdi** தோன்றுவார். அவர் ஏழு ஆண்டுகள் ஆட்சி செய்வார். இதனால் ஈரான் மிகவும் வல்லரசான நாடாக விளங்கும் எனக்கூறினார். மேற்கத்திய நாடுகளின் கொள்கைகளை மாதிரியாகப் பின்பற்றாமல் **Imam al-Mahdi**–யின் கொள்கைகளை ஈரானியர் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் கூறினார். இந்த அறிவிப்பை அனைத்து செய்தித் தாள்களும் வெளியிட்டது. தொலைக்காட்சியும் ஒளிப்பரப்புச் செய்தது.

இவர் (அந்திக்கிறிஸ்து) உலகெங்கிலும் சிதறியிருக்கும் இஸ்லாமியரை ஒன்று சேர்த்து, அவர்கள் மத்தியில் சீர்திருத்தம் மற்றும் ஒற்றுமையை ஏற்படுத்துவார். அதன்பிறகு, யூதர்களையும் இஸ்லாமியரையும் ஒன்றாக இணைக்கும் சமாதான முயற்சியில் இறங்குவார் (தானி.11:32). அதன்பின்பு யூதர்களைக் கொலைசெய்வார். இவரை யூதர்கள் அடையாளம் கண்டு எதிர்ப்பார்கள். அற்புதங்களையும் அடையாளங்களையும் இவரால் செய்ய முடியும். தேவனுடைய சிங்காசனத்தில் அமரும்படி முயலுவார். மரித்தவர்

களையும் உயிரடையச்செய்யும் அளவிற்கு அற்புதங்கள் செய்வார். இவருடைய நெற்றியில் அரேபிய மொழியில் **Kaf, fa, ra** என எழுதப் பட்டிருக்கும். இந்த எழுத்துக்களின் அர்த்தம் "அவிசுவாசி" எனப்படும். இந்த எழுத்துக்களை இஸ்லாமியரால் மட்டுமே கண்டு அறிந்துகொள்ள முடியும்.

ஈரானின் மூன்றாவது பெரிய நகரமான **Isfahan** எனும் நகரத்தில் இவர் தோன்றுவார் எனவும், இஸ்லாமியர்கள் மற்றும் யூதர்களைத் தன்னுடைய ஆதரவாளர்களாக அழைப்பார் என்பதும் இஸ்லாமியரின் மற்றுமொரு தீர்க்கதரிசனமாகும்.

இஸ்லாமியரின் இப்படிப்பட்ட தீர்க்கதரிசனத்தைப் பரிசுத்த வேதாகமத்தின் வெளிச்சத்தில் பார்ப்போமானால், அந்திக்கிறிஸ்து இஸ்லாமிலிருந்து தோன்றக்கூடும் என்பதை அறியலாம். 2 தெச.2:4–ன் முதற் பகுதி இவ்வாறு கூறுகிறது "அவன் எதிர்த்து நிற்கிறவனாயும்" இந்த வார்த்தை யாரால் கூறப்பட்டது? அப்போஸ்தலனாகிய பவுலின் மூலமாகப் பரிசுத்த ஆவியானவர் கூறினார். இதற்கு முன்பு இந்த வார்த்தை யாரால் உரைக்கப் பட்டது? தேவனால் உரைக்கப்பட்டது. தேவன் இதை ஆகாரிடம் கூறினார் (ஆதி.16:11–12). இது ஒரு ஆதாரம்.

இரண்டாவது ஆதாரம், மாமிசத்தில் வந்த இயேசுவை மறுதலிப்பவர் களில் இஸ்லாமியரும் யேகோவா சாட்சியினரும் முக்கியமானவர்களாவர். இந்த இரு கூட்டத்தாரில் கிறிஸ்தவத்தை அவதூறாகப் பேசுபவர்களும் கிறிஸ்துவின் பரிசுத்தமான பிறப்பை அசுத்தமாகப் பேசுபவர்களும் இஸ்லாமியர்களாவர். கிறிஸ்துவுக்கு விரோதமாகப் பேசுபவன் தேவனுக்கு விரோதமாகப் பேசுகிறவனாவான். மாம்சத்தில் வந்த இயேசுவை மறுதலிப்பவனே அந்திக்கிறிஸ்து எனக் கூறப்பட்டுள்ளது (2 யோவா.7). உன்னதமான தேவனுக்கு விரோதமாகத் தூஷணங்களையும் பேசுபவன் (தானி.7:25).

மூன்றாவது ஆதாரம், தேவன் இஸ்மவேலைக்குறித்துக் கூறுகையில் "அவன் துஷ்ட மனுஷனாயிருப்பான்" எனக் கூறினார் (ஆதி.16:12). இவனுடைய வழியில் வந்தவர்கள்தான் இஸ்லாமியர், நீதி.16:4 இவ்வாறு கூறுகிறது "தீங்கு நாளுக்காகத் துன்மார்க்கனையும் உண்டாக்கினார்." தீங்குநாள் என்பது எந்த நாளைக் குறிக்கிறது? (எபே.6:13). தீங்குநாள் என்பது அந்திக்கிறிஸ்துவின் காலத்தைக் குறிக்கிறது. "சோதனைக்காலம்" எனவும் கூறப்பட்டுள்ளது (வெளி.3:10). இஸ்லாம் மதத்தை ஏற்றுக்

கொள்ளாதவர்களைக் கொலைசெய்தால் பரலோகத்தில் அதிக வெகுமதி உண்டு என்பது தீவிரவாதிகளின் நம்பிக்கையாகும். இதை இயேசு முன்கூட்டியே கூறியிருந்தார் (யோவா.16:2).

இவைகளையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, அந்திக்கிறிஸ்து இஸ்லாமிலிருந்துதான் தோன்றுவான் என்பது வேத ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும். இந்த **Imam al-Mahdi**-யின் ஏழாண்டு ஆட்சியின் இறுதியில் (இயேசு) தோன்றுவார் என்பதையும் இஸ்லாமியர் நம்புகின்றனர்.

அந்திக்கிறிஸ்து ஜனங்களின் மத்தியிலிருந்துதான் வெளிப்படுவான். அதாவது, ஜனங்களுடன் இணைந்துதான் வளர்ந்து வருவான். அவன் வெளிப்படும்வரையிலும், தான் அந்திக்கிறிஸ்து என்பதை நிரூபிக்கும் வரையிலும் ஜனங்கள் அவனை அடையாளம் காணமாட்டார்கள். அவனுடைய நடவடிக்கைகள் தான் அவனை உலகிற்கு வெளிப்படுத்தும். நல்லவன்போலக் காண்பித்துப் பொல்லாதவனாக மாறுவான். ஜனங்களின் ஆதரவைப்பெற்று ஜனங்களின் மத்தியிலிருந்து எழும்புவான் (வெளி.13:1, தானி.7:3, 17). இந்த வசனங்களில், மிருகமானது (அந்திக்கிறிஸ்து) சமுத்திரத்திலிருந்து எழும்பி வரக்கண்டேன் எனக் கூறப்பட்டுள்ளது. சமுத்திரம் என்பது ஜனக்கூட்டங்களைக் குறிப்பதாகும் (வெளி.17:15). இங்கு கூறப்பட்டுள்ள சமுத்திரமானது இயற்கையான சமுத்திரம் அல்ல. காரணம், மிருகமாகிய அந்திக்கிறிஸ்து மனிதனாக இருப்பதால் சமுத்திரத்திலிருந்து ஏறிவர வாய்ப்பில்லை. வேதம் பழைய ஏற்பாட்டுக் காலத்து தேசங்களை சமுத்திரம் என அழைத்துள்ளது (யோபு 26:12, சங்.89:9–10, ஏசா.57:20, தானி.7:3).

அந்திக்கிறிஸ்துவை வணங்குபவர்கள் வெளி.13:8

அந்திக்கிறிஸ்து யார் என்பது வெளிப்படும்முன், அவனை யூதர்களும் அங்கீகரிப்பார்கள். ஆனால், இவன்தான் அந்திக்கிறிஸ்து என்பது தெரிந்தவுடன் அவனை எதிர்ப்பார்கள். அவனை ஒருபோதும் வணங்க மாட்டார்கள். அப்படியானால் யார் அவனை வணங்குவார்கள்? யூதராயினும், புறஜாதியாராயினும், எவர்களுடைய பெயர்கள் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்படவில்லையோ அவர்கள் அந்திக்கிறிஸ்துவை வணங்குவார்கள் (தானி.12:1–2, எபே.1:4; வெளி.13:8). ஜீவபுஸ்தகத்தில் பெயரெழுதப்படுதல் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும் (வெளி.21:27).

ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் பெயரெழுதப்பட்டிராத ஜனங்களின் ஆத்துமாக்களுக்கும் பாதுகாப்பிற்கும் தேவன் உத்தரவாதி அல்ல என்பதை வெளி.13:8 வெளிப்படுத்துகிறது. ஜீவபுஸ்தகத்தில் பெயரெழுதப்பட்டிராத ஜனங்கள் அந்திக்கிறிஸ்துவை வணங்கி அவனுடன் இணைந்து நரகம் செல்வது உறுதி (வெளி.20:15). உலகத்தோற்றமுதல் எவர்களுடைய பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படவில்லையோ, அவர்கள் சாத்தானையும் விக்கிரகங்களையும் ஆராதிப்பார்கள். அவர்களுடைய சொந்த ஊர் நரகமாகும்.

அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியில் விசுவாசிகளின் நிலை என்ன?

பரிசுத்த ஆவியானவரின் காலமாகிய கிருபையின் காலத்தில் இயேசுவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகள் (சபை) அந்திக்கிறிஸ்து வெளிப்படுவதற்கு முன்பு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். சபையானது எடுத்துக்கொள்ளப்பட்ட பின்புதான் அந்திக்கிறிஸ்து வெளிப்படுவான். அதுவரை பரிசுத்த ஆவியானவர் அவனைத் தடைசெய்துகொண்டிருப்பார். மிருகமாகிய அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியில் கைவிடப்பட்டவர்கள் மட்டுமே காணப்படுவார்கள். அவர்களில் சிலர் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஊழியம் செய்து இரத்தசாட்சிகளாக மரிப்பார்கள் (வெளி.14:12). இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களும் அடங்குவார்கள். இவர்களையல்லாமல் வேறு அநேகரும் மரிப்பார்கள் (வெளி.7:9). சிலரை தேவன் தப்புவிப்பார் (வெளி.12:13–17).

பரிசுத்த ஆவியானவரின் காலமாகிய கிருபையின் காலத்தில் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளின் சபையானது அந்திக்கிறிஸ்துவின் காலத்தில் இந்த பூமியில் இராது என்பதற்கு வெளி.3:10, ஏசா.57:1, 2 பேது.2:9. சரியான விளக்கம் தருகிறது. வெளி.2 மற்றும் 3–ஆம் அதிகாரங்களில் கூறிய சபையைக் குறித்தான வார்த்தையை இங்கு கூறவில்லை என்பதை கவனிக்கவும் (வெளி.2:7, 11, 17, 29, 3:6, 13, 22). வெளி. 3:10 இதற்கு இன்னுமொரு ஆதாரமாகும். வெளி.3:10ல் யோவான் "சபை" என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. ஆகவே, கிருபையின் காலத்தில் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் அந்திக் கிறிஸ்துவின் காலத்தில் காணப் படுவதில்லை. ஆனால், அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியில் வாழ்கிறவர்களில் சிலர் அதிகமான உபத்திரவங்களை சகித்து இயேசுவை ஏற்றுக்கொண்டு

விசுவாசிகளாக மாறுவார்கள் (வெளி.7:9–14).

பட்டயத்திற்கும் மரணத்திற்கும் குறிக்கப்பட்டவர்கள் அந்திக்கிறிஸ்துவினால் ஆளப்பட்டுக் கொலைசெய்யப்படுவார்கள். இதில் விசுவாசிகளும் அடங்குவார்கள் (வெளி.13:10, எரே.15:2, 43:11).

அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியில் பொருளாதார நிலை

(வெளி.18:1–24)

பொருளாதார நிலையானது மிகவும் பாதிக்கப்படும். முதன்முதலில் பாதிக்கப்படுகிறவர்கள் உலகெங்கும் காணப்படும் வியாபாரிகள் (தொழிலதிபர்கள்). காரணம், பொருட்கள் இருக்கும் ஆனால் அவைகளை வாங்குவதற்கு யாரும் இருப்பதில்லை (வெளி.18:13).

1. தொழிலதிபர்கள் பாதிக்கப்படுவார்கள் (வெளி.18:11–16)

2. கப்பல் மூலமாகத் தொழில் செய்பவர்களும் பாதிக்கப்படுவார்கள் (வெளி.18:17–19).

இந்த அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள "பாபிலோன்" இன்றைய ஈராக் என எண்ணக்கூடாது. இங்கு கூறப்பட்டுள்ள பாபிலோன் என்பது அந்திக்கிறிஸ்துவின் காலத்தில் செல்வம், பெருமை, பாவங்கள் போன்றவற்றால் உயர்ந்து காணப்படக்கூடிய தேசத்தைக் குறிக்கும் சொல்லாகும்.

அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியின்போது தேவனுடைய நியாயத்தீர்ப்பு

அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியின்போது தேவனுடைய தற்காலிக நியாயத்தீர்ப்பும் நடைபெறும். அவைகள் 21 வாதைகள் என அழைக்கப்படுகிறது. இவைகள் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. முதல் ஏழு வாதைகள் – முத்திரை – வெளி.6:1–17. 8:1

2. இரண்டாவது ஏழு வாதைகள் – எக்காளம் – வெளி.8:7–9:21, 11:15–19

3. மூன்றாவது ஏழு வாதைகள் – கோபகலசம் – வெளி.16:1–21

(இந்த மூன்றுவிதமான வாதைகளையும் குறித்து மூன்று நூல்களை எழுதியுள்ளேன். அவைகளை வாசித்து தெளிவாக அறிந்து கொள்ளலாம். ஆசிரியர்).

அந்திக்கிறிஸ்து யுத்தம்பண்ணுவான்

(தானி.11:40–45)

அந்திக்கிறிஸ்துவின் கொடுமை மற்றும் அகந்தையைக் கண்டு தென்திசை ராஜாவும் (அமெரிக்காவாக இருக்கலாம்) வடதிசை ராஜாவும் (இஸ்ரேல் தேசமாக இருக்கலாம்) இணைந்து வந்து அந்திக்கிறிஸ்துவையும் அவனுடைய ராஜ்யத்தையும் நொறுக்குவார்கள். அந்திக்கிறிஸ்து மிகவும் பெலவீனமடைந்து சாவுக்கு ஏதுவாக அடிபடுவான் (தானி.11:41, வெளி.13:3). இந்த யுத்தமானது உபத்திரவகாலத்தில் நடைபெறும். அதாவது, முதல் உபத்திரவகாலமான மூன்றரை ஆண்டுகளின் இறுதியில் நடைபெறும்.

அந்திக்கிறிஸ்து மறுபடியும் உயிரடைவான்

சாவுக்கு ஏதுவாக அந்திக்கிறிஸ்து காயமடைவான். அவனுடைய ராஜ்யமும் நொறுக்கப்படும். ஆனால், அவன் மறுபடியும் எழும்பி தன்னுடைய ராஜ்யத்தைக் கட்டி எழுப்புவான். இதைக் கண்டு உலகின் அனைத்து ராஜ்யங்களும் ஆச்சரியப்படும். மட்டுமல்லாது, அவனை உலகத்தார் அனைவரும் பின்பற்றுவார்கள் (வெளி.13:3). பூமியின் குடிகள் அனைத்தும் அவனை வணங்கும் (வெளி.13:8, 12, 14:9, 11, 20:4).

ஜனங்களின் செயல்கள்

அந்திக்கிறிஸ்துவின் ராஜ்யம் மீண்டும் எழும்புவதை காணும் ஜனங்கள் அவனை வணங்குவார்கள். அவர்கள் கூறும் வார்த்தையானது "மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்? என்பதாகும் (வெளி.13:4). இங்கு மனிதர்கள் குறிப்பிடுகின்ற இந்த வார்த்தையானது" பழைய ஏற்பாட்டில் தேவனுக்குக் கொடுக்கப்பட்ட துதியின் வார்த்தையாகும்" (யாத்.15:11, சங்.35:10, 113:5, ஏசா.40:18,25, 46:5, எரே.49:19, மீகா 7:18). தேவனுக்குக் கொடுக்கவேண்டிய ஆராதனையை அந்திக்கிறிஸ்துவுக்குக் கொடுப்பார்கள், தேவனைவிட்டு பூரணமாக இவர்கள் விலகுவார்கள் என்பது இதில் விளங்குகிறது.

உலகத்தார் அந்திக்கிறிஸ்துவை வணங்குவதற்கான காரணம்

சாவுக்கு ஏதுவான காயமடைந்தாலும் அது சொஸ்தமாகி மறுபடியும் எழும்பும் அந்திக்கிறிஸ்துவின் வல்லமை ஜனங்களை அதிசயமடையச் செய்யும். காரணம், அவன் இயேசுவுக்கு ஒப்பிடப்படுவான். காயப்பட்டு

மரணமடைந்து உயிர்த்தெழுந்தவர் இயேசு. அந்திக்கிறிஸ்துவும் இயேசுவைப் போன்று வல்லமை உடையவன் என எண்ணி அவனை வணங்குவார்கள் (மத்.24:5, 24). இயேசு கிறிஸ்து மரணத்தைவென்று உயிருடன் எழுந்தபடியால், விசுவாசிகளாகிய நாம் அவரை ஆராதிக்கிறோம் (அப்.17:30–31). அந்திக்கிறிஸ்துவின் ராஜ்யம் மீண்டும் எழும்பியபடியால் பூமியின் குடிகளாகிய அவிசுவாசிகள் அவனை வணங்குவார்கள் (வெளி.13:14). இயேசுவை உயிர்த்தெழச் செய்தவர் தேவன். அந்திக்கிறிஸ்துவின் ராஜ்யத்தை எழுப்புகிறவன் சாத்தான் (வெளி.13:2b).

அர்மகெதோன்

அந்திக்கிறிஸ்துவின் இறுதி யுத்தமும் அழிவும்

மறுபடியும் உயிரடையும் அந்திக்கிறிஸ்து மறுபடியும் யுத்தம் பண்ணுவான் (தானி.11:41–43). கிழக்கு தேசத்திலிருந்து வரும் செய்தியும் (வெளி.9:13–21, 16:2). வடதிசை தேசத்திலிருந்து வரும் செய்தியும் (தானி.11:40). அவனைக் கலங்கப்பண்ணும் (தானி.11:44). இதனால் மிகவும் கோபங்கொண்டு அநேகரைக் கொலைசெய்வான் (சகரி.13:8). அவனது தலைமை அலுவலகமானது பரிசுத்த நகரமாகிய எருசலேமில் காணப்படும். சமுத்திரங்களுக்கு இடையிலான சிங்காரமான பரிசுத்த மலையான மோரியாவில்தான் எருசலேம் அமைந்துள்ளது (தானி.11:45a).

மோரியா மலையில்தான் சாலமோனுடைய ஆலயமிருக்கிறது. இந்த மலையில்தான் ஆபிரகாம் ஈசாக்கை பலியிடும்படி கொண்டுசென்றான் (ஆதி.22:2). மோரியா மலையிலிருந்து ஒருசில மீட்டர் (சிலநூறு மீட்டர்) தொலைவில்தான் ஒலிவமலை அமைந்துள்ளது. இந்த மலையின் சிகரமானது மோரியா மலையின் சிகரத்தைவிட நூறு மீட்டர் உயரம் உடையதாகும். இயேசுகிறிஸ்து இறுதியாக தம்முடைய சீஷர்களுடன் உரையாடியதும், பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதும் இந்த ஒலிவ மலையில்தான் (மத்.28:16–17, அப்.1:1–12). இயேசு தம்முடைய இரண்டாம் வருகையில் இந்த மலையில்தான் இறங்குவார் (சகரி.14:4).

மகா உபத்திரவ காலமாகிய அந்திக்கிறிஸ்துவின் மூன்றரை ஆண்டுகளின் (வெளி.13:5) இறுதியில், சாத்தான் தன்னுடைய ஆட்களையெல்லாம் யுத்தத்திற்குக் கூட்டிச்சேர்ப்பான். அந்திக்கிறிஸ்துவுக்காக சாத்தான் செயல்படுவான். கர்த்தருடைய மகாநாளில் நடக்கவிருக்கும் இந்த யுத்தத்திற்கு பூமியின் ராஜாக்களைப் பிசாசும், அந்திக்கிறிஸ்துவும்,

கள்ளத்தீர்க்கதரிசியும் இணைந்து கூட்டிச்சேர்ப்பார்கள் (வெளி.16:13–14). "அர்மகெதோன்" எனும் இடத்தில் அவர்களைக் கூட்டிச்சேர்ப்பான் (வெளி.16:16).

அர்மகெதோன் எனப்படுகிற இடமானது தற்போது Megiddo-pass எனப் படுகிறது. இது பாலஸ்தீன தேசத்திலுள்ள பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. இது உயரமான மலையல்ல. இந்த மலையில்தான் இஸ்ரவேல் ஜனங்கள் அநேக யுத்தங்களை சந்தித்தார்கள். இந்த மலையில்தான் சாலமோன் ராஜா தன்னுடைய குதிரைத் தளவாடத்தை அமைத்திருந்தான். இந்த இடத்தில் வைத்து நடக்கும் யுத்தத்தில் அந்திக்கிறிஸ்துவும் அவனுடைய ஆதரவாளனாகிய கள்ளத்தீர்க்கதரிசியும் இயேசுவுடன் யுத்தம்பண்ணி, தோல்வியடைந்து நரகத்தில் தள்ளப்படுவார்கள் (வெளி.19:19–20). இந்த யுத்தத்தின்போது இயேசுதாமே யுத்தம்பண்ணுவார் (சகரி.14:1–4). அந்திக்கிறிஸ்து இவ்வாறு அழிவான். அந்திக்கிறிஸ்துவை இயக்கிவந்த வலுசர்ப்பமாகிய பிசாசு இந்த யுத்தத்தின்போது பிடிபடுவான். அவனை தேவதூதன் பாதாளத்தில் அடைத்துவைப்பான் (வெளி.20:1–2).

கள்ளத்தீர்க்கதரிசி
(இரண்டாவது மிருகம்)

அந்திக்கிறிஸ்துவின் பிரதிநிதிதான் இந்தக் கள்ளத்தீர்க்கதரிசி. இவனுடைய பெயர் இரண்டாவது மிருகம் எனவும் கூறப்பட்டுள்ளது. (வெளி. 14:11–12). இந்த மிருகமானது பூமியிலிருந்து, அதாவது மனிதர்களின் நடுவிலிருந்து எழும்பிவரும். பூமியின் கீழிருந்து ஏறிவரும் என எண்ணக் கூடாது. இந்த இரண்டாவது மிருகமானது பிசாசினால் இயக்கப்படுகிற ஒன்றாகும். பிசாசின் பிரதிநிதி அந்திக்கிறிஸ்து, அந்திக்கிறிஸ்துவின் பிரதிநிதி கள்ளத்தீர்க்கதரிசி. கள்ளத்தீர்க்கதரிசியும் அந்திக்கிறிஸ்துவும் பிசாசின் மனிதர்கள். ஆனால், அந்திக்கிறிஸ்துதான் பிசாசின் மிக முக்கியமான நபராவான். அந்திக்கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்படும் அளவிற்கு கள்ளத்தீர்க்கதரிசிக்கு அதிகாரம் கொடுக்கப்படுவதில்லை.

கள்ளத்தீர்க்கதரிசியின் குணாதிசயங்கள்

1. தோற்றத்தில் ஆட்டுக்குட்டி – வெளி.13:11
2. வார்த்தையில் வலுசர்ப்பம் – வெளி.13:11, மத்.7:15
3. அவன் ஒரு கள்ளத்தீர்க்கதரிசி – வெளி.16:13, 19:20, 20:10

ஆட்டுக்குட்டி என்பது வேதத்தில் இயேசுவைக் குறிப்பதாகும் (வெளி.5:6, 7:17, 13:8, யோவா.1:29). ஆனால் ஆட்டுக்குட்டியானவரின் வேஷத்தை இவன் தரித்துக்கொள்வான் (2 கொரி.11:14–15). தோற்றத்தில் நல்லவன் போலக் காட்சியளித்தாலும் அவனுடைய வார்த்தை அவனை அடையாளம் காட்டும். வலுசர்ப்பமானது வேதத்தில் சாத்தானைக் குறிப்பதாகும் (வெளி. 20:2, ஆதி.3:1). சர்ப்பத்தைப்போலப் பேசினான் எனக் கூறப்பட்டுள்ளது. சாத்தான் எப்படிப் பேசுபவன்? நல்லவன்போலப் பேசுபவன், வஞ்சனையான வார்த்தைகளைப் பேசுபவன், இச்சையான வார்த்தைகளைப் பேசுபவன்.

1. ஏவாளிடம் நல்லவன் போலவும் இச்சையைத்தூண்டும் விதத்திலும் பேசினான் – ஆதி.3:1–5

2. இயேசுவிடமும் அவ்வாறே பேசினான் – மத்.4;3–11, மத்.16:23

3. மனதை மயக்கும்படிப் பேசுவான் – எபே.6:11, 2 தீமோ.2:26

பிசாசினால் இயக்கப்படுகிற கள்ளத்தீர்க்கதரிசியின் வார்த்தையும் செயலும் சாத்தானுடையதுபோல் இருக்கும். அவனால் அநேகர் வஞ்சிக்கப்படுவார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசியின் செயல்கள்

1. அந்திக்கிறிஸ்துவை வணங்கும்படி பூமியின் குடிகளைத் தன் வசப்படுத்துவான் வெளி.13:12b.
2. பெரிய அற்புதங்களைச் செய்வான் வெளி.13:13 .
3. தனது அற்புத சக்தியினால் பூமியின் குடிகளை மோசம் போக்குவான் வெளி.13:14a
4. அந்திக்கிறிஸ்துவுக்கு சொரூபம் பண்ணவேண்டுமெனக் கட்டளை யிடுவான் வெளி.13:14b
5. சொரூபமானது பேசவும் செயல்படவும் அதற்கு ஜீவனைக் கொடுப்பான் வெளி.13:15
6. சொரூபத்தை வணங்காதவர்களைக் கொலைசெய்ய அந்த சொரூபத்தைத் தூண்டுவான் வெளி.13:15
7. அந்திக்கிறிஸ்துவின் முத்திரையைத் தரிக்கும்படி ஜனங்களுக்குக் கட்டளையிடுவான் வெளி.13:16–17

8. முக்கியமாக விசுவாசிகளைத் துன்புறுத்திக் கொலைசெய்வான் வெளி. 13:15, 17

9. விற்கிறவர்களையும் வாங்குபவர்களையும் தனது ஆதிக்கத்திற்குள் கொண்டுவருவான் வெளி.13:17 .

10. அந்திக்கிறிஸ்துவை வணங்கும்படி முதன்முதலில் ஆலோசனை சொல்பவன் வெளி.13:12b

கள்ளத்தீர்க்கதரிசி யாராக இருக்கக்கூடும்?

அவன் இரு கொம்புகளை உடையவனாக இருப்பான் என கூறப் பட்டுள்ளது (வெளி.13:11). இதன் அர்த்தம் அவனுக்குக் கொம்புகள் காணப்படும் என்பதல்ல. கொம்புகள் என்பது அதிகாரத்தைக் காட்டுகிறது. ஆகவே, அவன் அரசியல் செல்வாக்குடைய மதத்தலைவனாக இருக்க வேண்டும். போப்பாக இருக்கலாம் என்பது வேத ஆராய்ச்சியாளர்களின் கருத்து, உலக மதத்தலைவர்களில் அன்றும் இன்றும் அரசியல்வாதிகளை விட மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற்றிருப்பவர்கள் கத்தோலிக்க மதத்தில் உள்ள போப்பாண்டவர்களாவர். தற்போதைய போப்பான **Joseph Aloisiys Ratzinger** சமீபத்தில் சீன அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களைக் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இயேசுவின் காலத்தில் வாழ்ந்துவந்த, பிரதான ஆசாரியர்கள் அரசியல் செல்வாக்குடையவர்களாக இருந்தனர். இயேசுவைக் கொலைசெய்யத் தேடின முதலாம் ஏரோதும்கூட பிரதான ஆசாரியர்களின் சிபாரிசுடன் ராஜாவானான். அப்போஸ்தலர்களின் காலத்திற்குப்பிறகு கத்தோலிக்க மதத்தில் தோன்றிய போப்பாண்டவர்களும்கூட அரசியல் செல்வாக்குடைய வர்களாக இருந்தனர். ஆகவே, அந்திக்கிறிஸ்துவுக்குத் துணைப்போகும் கள்ளத்தீர்க்கதரிசியான மனிதன் போப்பாக இருக்கக்கூடும் என்பது ஒரு கருத்தாகும். மரித்த போப்பாண்டவரின் பெயரை ஒரு தாளில் எழுதி அதன்மூலம் சரீரசுகம் அடைந்ததாக கன்னியாஸ்திரீ ஒருவர் கூறிய சாட்சியானது செய்தித்தாளில் வெளியானது (மாலை மலர். செவ்வாய்க் கிழமை, ஜனவரி 18, 2011).

இரட்சிப்பின் அனுபவத்தை அடையாமலும், இயேசு ஒருவர் மூலம் மட்டுமே இரட்சிப்பு என்பதைப் போதியாமலும், விக்கிரக ஆராதனையை விட்டு விலகாதவர்களுமாகிய கத்தோலிக்க போதகர்களில் பலர் இன்றைய நாட்களில் அற்புதங்களைச் செய்வதை நம்மால் காணமுடிகிறது. கள்ளத்

கள்ளத்தீர்க்கதரிசியின் முடிவு

201
092

முடிவுரை

இந்நூலை வாசித்துப் பயனடைந்திருப்பீர்கள் என கர்த்தருக்குள் நம்புகிறேன். நம்மைச் சுற்றிலும் என்ன நடைபெறுகிறது என்பதை அறியாமல், இன்றும் ஆரோக்கியமற்ற உபதேசங்களைக் கேட்டுவருகிறோம். வரவிருக்கும் கொடிய காலங்களையும் பரலோக ராஜ்யத்தைக்குறித்தும் பிரசங்கியாமல், கவர்ச்சிகரமான பிரசங்கம் செய்கிறவர்கள் மத்தியில் வாழ்ந்துவருகிறோம். பலவிதமான தவறான உபதேசங்கள் பெருகிவிட்டன. விசுவாசிகள் தேவனுடைய பெயரில் அதிகமாக வஞ்சிக்கப்படுகிறார்கள் (அப்.20:30, எபே.4:14, 2 பேது.2:1–3).

தேவனால் அழைக்கப்பட்ட ஊழியர்கள் யார்? தேவனால் அழைக்கப் படாதவர்கள் யார்? என்பதை விசுவாசிகளால் அறியமுடியவில்லை. இதற்குக் காரணம், வேத அறிவு இல்லாமையே ஆகும். எல்லா விசுவாசிகளும் வேத அறிவில் வளர்ந்து போதகர்களுக்கு இணையான வேத அறிவினைப் பெறவேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாகும் (1 கொரி.3:1–2; எபி.5:12–14). ஆகவே, நாம் அனைவரும் வேதத்தை நன்றாக ஆராயவேண்டும். மேலும் ஏதாவது சந்தேகங்கள் இருக்குமாயின் என்னை தொடர்புகொண்டு பேசலாம். கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து அவரையும் அவருடைய சித்தத்தையும் அறிகிற அறிவினால் உங்களை நிரப்புவாராக ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்

சாலமோன்

உலகம் அந்திக்கிறிஸ்துவையும் அவனது ஆளுகையையும் வரவேற்க துரிதமாக ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. அவனை தெய்வமாக ஏற்றுக்கொள்ளாதோர் பெரிய உபத்திரவத்தைச் சந்திப்பார்கள். இரத்த சாட்சிகளாக பலர் மரிப்பார்கள். அந்திக்கிறிஸ்துவை ஆதரித்து கள்ள தீர்க்கதரிசி அநேக அற்புதங்கள் செய்து அதன் மூலமாக அந்திக்கிறிஸ்துவை நம்பவைப்பான். அவனை ஏற்றுக்கொண்டோர் நரகத்திற்குப் பாத்திரவான்களாக மாறுவார்கள்.

நாம் ஏன் அவனையும் அவனுடைய கொடிய ஆளுகையை விளங்கிக் கொள்ளவேண்டும்? அந்த ஆட்சிக்குத் தப்பித்துக் கொள்ளவே இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட நாம் தகுதியைப் பெற்றுக்கொள்வதே அதற்கு ஒரே வழி.

இந்நூலின் ஆசிரியர் சாலமோன் அதைத் தெளிவுப்படுத்துகிறார். வாசித்தறிந்து பயனடையுங்கள்.

சாலமோன் பரம்பரை C.S.I. குடும்பத்தில் பிறந்தவராவார். கராத்தே கலையை கற்று குறிப்பிட்ட பகுதிகளில் அக்கலையைக் கற்றுக்கொடுத்து வந்தவர். தனது 21–வது வயதில் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு 23–வது வயதில் முழுநேர ஊழியராக தன்னை ஒப்புக்கொடுத்தார்.

வேதத்தை ஆவியானவருடைய உதவியால் அனுதினமும் பலமணி நேரங்கள் ஆராய்ந்து, மிகவும் ஆழமாக போதிக்கக்கூடியவர். போதிக்கக் கூடிய வரம் பெற்றவர். ஒவ்வொரு வசனத்தையும் விசுவாசிகள் எளிதாகப் புரிந்துகொள்ளும் விதத்தில் போதிப்பவராவார். எல்லா விசுவாசிகளும் வேதத்தை சரித்திர ஆதாரத்துடன் கற்று, கிறிஸ்துவுக்குள் தேறினவர் களாக மாறி, ஊழியர்களுக்கு நிகரான வேத அறிவினைப் பெறவேண்டு மென்பதுதான் இவரது தரிசனமாகும்.

WORD OF CHRIST
100/3, Nirmala Apartments
Medavakkam Tank Road
Kellys, Chennai - 600 010 India